# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 31.10.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அர் ரூமின் 38 முதல் 41 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

பொருள் : அல்லாஹ் தான் நாடுவோருக்கு வாழ்விற்கு வேண்டிய (உண)வை தாராளமாகக் கொடுக்கின்றான். மேலும் (தான் நாடுவோருக்கு) கட்டுப்படுத்தியும் கொடுக்கின்றான் என்பதனை அவர்கள் காணவில்லையா? நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்தினருக்கு உண்மையாகவே இதில் பல அடையாளங்கள் உள்ளன.

எனவே நீர் உறவினருக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் அவர்களுக்கு உரியதை கொடுப்பீராக. இவ்வாறு செய்வது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற நாடுவோருக்கு சிறந்ததாகும். மேலும் இவர்களே வெற்றி பெறுபவர்களாவார்கள்.

மக்களின் செல்வங்களை பெருக வேண்டுமென்று, நீங்கள் வட்டிக்குக் கொடுப்பது அல்லாஹ்வின் பார்வையில் பெருகுவதில்லை. ஆனால் நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியினை நாடி எதனை ஸக்காத்தாகக் கொடுத்தாலும் – இத்தகையவர்களே (துங்கள் செல்வங்களைப்) பன்மடங்காகப் பெருக்கிக் கொள்கின்றனர்.

அல்லாஹ்வே உங்களைப் படைத்தான். பின்னர் அவனே உங்களுக்கு உணவு அளித்தான். பின்னர் அவன் உங்களை மரணிக்கச் செய்வான். பின்னர் அவன் உங்களை உயிர்பெறச் செய்வான். உங்களால் (இறைவனுக்கு) இணையாக்கப் பட்டவர்களுள் எவரேனும் இச்செயல்களில் எதையாவது செய்கின்றாரா? அவன் தூய்மையானவன். மேலும் அவர்கள் (அவனுக்கு) ஏற்படுத்தும் இணைகளை விட்டும் அவன் மிக்க மேலானவன்.

நான் ஓதி அதன் மொழியாக்கமும் கூறிய முதல் வசனத்தில் அல்லாஹ் தனது திருப்தியைப் பெறுபவரைப் பற்றி கூறுகிறான். அவன்தான் செல்வத்தை மிகுதியாகவும் வழங்குகின்றான். குறைவாகவும் வழங்குகின்றான். ரிஸ்கை வழங்குபவனும் அவனே; நிறுத்துபவனும் அவனே. உண்மையான மூஃமினுக்கு இறைவனுடைய **ரஸ்ஸாக்** (உணவளிப்பவன்) என்ற பண்பு மிகவும் பெரிய அடையாளமாக விளங்குகிறது. அவரது ஈமான் உறுதியாகிறது. இக்கால பொருளாதார நிலையின் சீர்கேட்டினால் பணக்கார நாடுகளும் ஏழை நாடுகளும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

உலகிற்கு நமது சேவை எப்போதும் தேவை என்று சில நாடுகள் கருதுகின்றன. ஏனெனில் இந்தக் காலத்தில் அவர்களின் விஞ்ஞான அறிவு ஒவ்வொரு வினாடியும் உலகிற்கு தேவையாக இருக்கிறது. இன்னும் சில பணக்கார சக்திகள் நம்மால்தான் முடியும். வெகுவிரைவில் எல்லா நாட்டையும் நமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம் என்று கருதுகின்றன. இப்போதே பல நாடுகளை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. முழு உலகிலும் தமது ஆட்சியை நிலைநாட்ட கனவு கண்டு கொண்டிருக்கின்றன. அவர்களது கருத்தின்படி விஞ்ஞானத்தில் எவரும் அவர்களுடன் போட்டிபோட முடியாத அளவுக்கு முன்னேற்றம் கண்டு விட்டனர். இயற்கைச் சீற்றங்களால் அந்நாடுகளில் உணவுப் பற்றாக்குறைகளும் ஏற்படுகின்றன. இருந்தும் எங்களுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. மருத்துவத்துறையிலும் நாங்கள் அளவற்ற முன்னேற்றம் கண்டு விட்டோம். ஆயுத பலத்திலும் நாங்கள் பெரும் பலம் பெற்றவர்கள். உலகம் எமது அனுபவத்தில் இருந்து பயன்பெறுகின்றன என்கின்றனர். எனவே பூமி மட்டுமல்ல; வானமும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். தாமாகவே சரணடைந்து எங்கள் கட்டுப்பாட்டில் வந்து விடுங்கள் என்கின்றனர். எங்களிடம் பொருளாதார சீர்கேட்டைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளது என்றும் கருதுகின்றனர். எம்மைச் சார்ந்து நிற்பது உலகிற்கு கட்டாயமாகும். மேலும் இவர்களிடம் செல்வ வளம் இருந்தும் மிக வேகமாக சமுதாயம் அவர்களால் சீர்கெட்டது. இவையனைத்துக்கும் அசல் காரணம் என்ன என்பதை இப்போதுவரை அவர்கள் சிந்திக்கத் தொடங்கவில்லை. அதன் காரணம், எல்லா ஆற்றல்களின் எஜமானனும், உணவளிப்பவனும் ஆகிய

இறைவனை அவர்கள் உண்மையான முறையில் ஏற்கவில்லை. அல்லது ஏற்க வேண்டிய அளவிற்கு அவர்கள் ஏற்கவில்லை. இந்த ஆற்றல்கள், நாடுகள் சமுதாய ரீதியில் மிகவும் உறுதியாக இருக்கின்றன. அல்லது சிறிது காலம் வரை உறுதியாக இருந்தன.

வானங்கள், பூமியைப் படைத்த இறைவனது சட்டம் ஒன்று இவ்வுலகில் செயல்பட்டு வருவதை இவர்கள் கவனிப்பதில்லை. வானங்கள், பூமியில் நிகழும் பேராபத்துகள், பூமி அதிர்ச்சிகள், கடற்கொந்தளிப்புகள், புயற்காற்றுகள் வடிவில் வருகின்ற இந்த ஆபத்துகளை எவரும் எதிர்த்து நிற்க இயலாது. ஒவ்வொரு பொருளும் தலை கீழாகி விடுகிறது.

பிறகு இயற்கைக்கு மாற்றமாக நடத்திச் செல்லப்பட்ட செயல்களின் விளைவுகளும் கண்முன் வருகின்றன. ஒன்று, ஓர் இறைவனை மறந்ததால் வானங்களிலும், பூமியிலும் இருந்து வரும் பேராபத்துகள் தனது தாக்கத்தைக் காட்டுகின்றன. இரண்டாவது, இறைக் கட்டளைக்கு மாற்றமாக செய்யப்பட்ட சீர்கேடு தனது விளைவைக் காட்டுகிறது. பிறகு இந்த அவலங்களுக்கு தீர்வு தேடப்படுகிறது. ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. உண்மையான தீர்வின் பக்கம் அவர்கள் வரவில்லை. ஓரளவுக்கு அருகில் வர முயற்சி செய்கின்றனர். ஆனால் அதற்கு அவர்களுக்கு தெரிந்த வழி உற்பத்தியை பெருக்குதல் என்பதாகும். நாம் பார்க்கிற இவையனைத்தினாலும் நமது ஈமான் வளர்கிறது. இப்போது அஹ்மதிகளுக்குள்ள பொறுப்பு உலகத்தை எச்சரிக்கை செய்ய வேண்டும். இந்த எல்லா ஆபத்துகளின் உண்மையான காரணம் இறைவனை விட்டு விலகியதுதான். அடியார்களின் உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனம் செலுத்துதல், அடுத்தவரின் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தட்டும்!

பல பில்லியன் டாலர் அல்லது பல பில்லியன் பவுண்டுகள் செலவழித்து நிவாரண உதவிகள் செய்வது நிரந்தர தீர்வாகாது. அதுகூட சற்று சிந்தித்துப் பார்த்தால் யாருக்கு நஷ்டம் ஏற்பட்டதோ அவர்களின் பையில் இருந்து எடுக்கப்பட்டதுதான். இன்றைய முஸ்லிம் நாடுகளும் இறைவன் திருக்குர்ஆனில் வழிகாட்டிய வாழ்க்கை முறையை விடுத்து இவர்கள் பின்னால் செல்கின்றனர். பிறகு ஈமான் உள்ளவர்களின் செயல்பாடும் இவர்களிடம் இல்லை. மேலும் முஸ்லிம் அரசுகளின் தலைவர்களும் தமது சுய இலாபத்தை மட்டுமே பார்க்கின்றனர் என்று கூற வேண்டும். மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் அரபு நாடுகளிடம் எண்ணெய் வளம் இருக்கிறது. ஆனால், இறைக் கட்டளையின்படி அவர்கள் தமது அரசை நடத்திக் கொண்டு செல்லவில்லை. ஈமான் உள்ளவரின் கடமையை அவர்கள் நிறைவேற்றவில்லை. மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது தமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் தமது வசதி வாய்ப்புகளை இறை கட்டளைக்கேற்ப நடத்திக் கொண்டு செல்லவில்லை. உதாரணமாக, இவர்களிடம் எண்ணெய் வருவாய் இருந்தது. அளவுக்கு அதிகமான பணத்தை ஐரோப்பிய நாடுகளில் முதலீடு செய்தனர். அதிலிருந்து வட்டி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அது தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்கின்றனர். இந்த முஸ்லிம் நாடுகள் பிறருக்கு காட்டுவதற்காக இஸ்லாமிய வங்கி என்று தங்கள் நாடுகளில் வங்கிகளை உருவாக்கி வைத்துள்ளனர். இவற்றிலும் வட்டி உண்டு. வெளிப்படையில் இஸ்லாமிய வங்கி என்று இவை தம்மை அழைத்துக் கொள்கின்றன. உண்மையில் இஸ்லாம் விரும்புகிற திருக்குர்ஆன் விரும்புகிற நடைமுறை அவர்களிடம் இல்லை. ஏனெனில் ஆழமாகப் பார்த்தால் இஸ்லாமிய வங்கி என்று கூறக் கூடியவையும் வட்டியின் ஒருவகையை தம்மிடம் கொண்டுள்ளன; பலன் பெறுகின்றன. இவர்கள் இஸ்லாமிய போதனையில் இருந்து விலகி தமது செல்வத்தை பயன்படுத்துகின்றனர். மேற்கத்திய நாடுகளிடம் தமது செல்வத்தை தருகின்றனர். எனவே, பொருளாதார வீழ்ச்சி ஏற்படும்போது நிச்சயமாக இவர்களது செல்வமும் பாதிக்கப்படும். இறைவன் தனது திருப்தியைப் பற்றி பேசும்போது மூஃமின்களுக்கு போதனை செய்கிறான். நான் ஓதிய முதல் வசனமான சூரா அர்ரூமின் 26-வது வசனத்தில் இறைவன் கூறுகிறான். உங்கள் உறவினர்களுக்குரிய உரிமையை வழங்குங்கள். ஏழை எளியவர்களுக்கு அவர்களுக்குரிய உரிமையை வழங்குங்கள். பயணிகளுக்கு அவர்களுக்குள்ள உரிமையை வழங்குங்கள். தமது செல்வத்தை சரியாக பயன்படுத்துவதற்கு மூன்று பிரிவினருக்கு வழங்க வேண்டும் என்று வந்துள்ளது. பிறகு அவ்வாறு செய்வதன் மூலம் அதன் பலன் எவ்வாறு கிடைக்கும் என்பதைப் பற்றி இரு விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று, அல்லாஹ்வின் திருப்தி. இரண்டாவது, இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெற்றி. எனவே மூஃமின் ஆவதற்கு வெறுமனே நாம் ஈமான் கொண்டோம், நாம் முஸ்லிம் என்று வாயளவில் சொன்னால் போதாது.

நாம் **ரஸ்ஸாக்** ஆகிய இறைவனை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று வாயளவில் கூறினால் போதாது. ஈமான் கொண்டதாக அறிவித்தல் இறைவனின் ரஸ்ஸாக் என்ற பண்பை உறுதியாக நம்புதல் ஆகியவற்றிற்கு செயல்முன்மாதிரி அவசியம். அல்லாஹ் ரஸ்ஸாக் என்பதில் ஒருவர் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தால் ரிஸ்க் குறைவதால் பயப்படமாட்டார். இறைவன் அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்வான் என்று நம்புவார். பிறகு இறைவன் தந்த ரிஸ்கை அவனது கட்டளைக்கு ஏற்ப செலவு செய்கிறார். ஒருவரது பொருளாதார நிலை உயர்ந்திருந்தால் அவர் இறை கட்டளைக்கேற்ப மற்றவருக்கு, தேவை உடையவருக்கு வழங்குகிறார். ஏழை எளியவர், அண்டை அயலார் மேலும் தமது சக முஸ்லிம் சகோதரருக்கு மற்றும் முழு உம்மத்திற்கும் தனது கடமையை அவர் நிறைவேற்ற வேண்டும். பணக்கார இஸ்லாமிய நாடுகள் அருகிலுள்ள ஏழை நாடுகளை எப்படி வளர்ச்சி அடையச் செய்வது என்று சிந்திக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் இறை கட்டளைக்கு ஏற்ப தமது உரிமையை செலுத்தியவர் ஆவார்.

அல்லாஹ் கூறுகிறான்: **ஆதிஃதல் குர்பா ஹக்கஹு வல் மிஸ்கீன** (30:36). இங்கு ஆத் என்ற சொல்லுக்கு கண்ணியத்துடன் வழங்குதல் என்று பொருள். மேலும் **ஹக்கஹு** (அவர்களுடைய உரிமையை) என்று கூறி மேலும் தெளிவாக்கி விட்டான். இந்த உணர்வுடன் தொண்டாற்றுவது உங்கள் மீது கடமையாகும். இது கருணையல்ல; நன்கொடையல்ல. மற்றவருக்கு நீங்கள் இரக்கம் பார்த்து தருவதல்ல. மாறாக வாய்ப்பு இருக்கும்போது வழங்குவது உங்கள் மீது பர்ழ் (கடமை) ஆகும்.

இஸ்லாமிய நாடுகள் ஏழையான அண்டை இஸ்லாமிய நாடுகளின் வளர்ச்சியைப் பற்றி சிந்தித்தால் தமது எண்ணெய் வளத்திலிருந்து செலவு செய்தால், பேராசையால் தமது செல்வத்தை மேற்கத்திய நாடுகளின் வங்கிகளில் போட்டு வளர்ச்சியடையச் செய்து, அதிலிருந்து வட்டி வாங்கலாம் என்று சிந்திக்காமல் இருந்தால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவர். பிறகு அவை வெற்றி பெறும். இந்த சில நாடுகள் குறித்து பத்திரிகைகளில் வந்துள்ளது. அந்நாடுகள் தமது நிலைமை நன்றாக இருப்பதாக அறிவிக்கின்றன. அவர்களின் எண்ணம் தவறு. நம்மிடம் எண்ணெயின் பணம் இருக்கிறது. எனவே நமக்கு ஒரு ஆபத்தும் இல்லை என்று நினைக்கின்றனர். வெளிநாடுளில் போடப்பட்ட அவர்களது பணத்திற்கும் பெரும் பாதிப்பு உள்ளது. சுருக்கமாக, மேற்கத்திய நாடுகளில் நமது அஹ்மதிகள்கூட சிலர் வங்கிகளில் கடன் வாங்குகின்றன. அவற்றில் பல கடன்கள் அனாவசியமான (தேவையில்லாத) கடன்கள் ஆகும். வீட்டிற்குப் பொருள் வாங்குவதற்கு, கார் வாங்குவதற்கு, வீடு வாங்குவதற்காக வங்கிகளில் கடன் வாங்குகின்றனர். ஆனால் இது அனாவசியமான கடன் ஆகும். இவ்வாறு எண்ணெய் செல்வத்தின் பணம் இவர்களிடம் அக்கவுண்டில் போடப்படுகிறது. தமது பணம் விரைவாக வளர்வதாக கருதுகின்றனர். பிறகு மேலும் மேலும் பணம் போட ஆர்வம் காட்டுகின்றனர். வங்கிகள் சிறிது பணத்தை மட்டும் நாட்டிற்காக செலவு செய்கின்றன. இது சம்பந்தமாக நமது சில அஹ்மதிகள் நல்ல கட்டுரைகள் எழுதியுள்ளனர். எஞ்சிய பெரும் தொகை மற்றவர்களுக்குதான் பயன்படுகிறது. எண்ணெய் வளத்தின் பைசாவை அனாவசியமான செலவுகளில் வீணாக்குகின்றனர். பெரும்பகுதி பணம் வீண் செலவழிக்கப்படுகிறது. ஒரு வங்கி ஊழியர் கூறுகிறார். கிட்டத்தட்ட வங்கிகளின் மொத்த மூலதனத்தின் 45 சதவீதம் வீடு வாங்குவதற்காக கடனாக தரப்படுகிறது. குறைந்த தொகையே தேவையான செலவுகளுக்கு பயன்படுகிறது. எளிய நிபந்தனைகளுடன் கடன் தரப்படுகிறது. நமது பள்ளியில் உட்கார்ந்திருக்கிற பலருக்கு இந்த எளிய நிபந்தனை என்னவென்று தெரியும். மூன்று இலட்சம் விலையுள்ள ஒரு இடத்திற்கு ஒரு தொகையை கையில் வைத்துக் கொண்டு 10 மடங்கு தொகையை வங்கியிடம் கடனாக கேட்கப்படுகிறது. நீங்கள் இவ்வளவு சதவீதம் வட்டியை திருப்பிச் செலுத்தத் தயார் எனில் உங்களுக்கு வீடு கட்டுவதற்கு Loan தருவோம் என்கின்றனர். அவர்களுக்கு கையில் இருக்கும் பணம் போக மீதியுள்ள பணத்தை வங்கி தருகிறது. பிறகு கடன் வாங்குபவர் ஓர் அணு அளவும் சிந்திப்பதில்லை. நாம் வட்டியுடன் சேர்த்து எவ்வளவு செலுத்த வேண்டும்? எவ்வளவு காலத்திற்கு அப்பணத்தை கட்டிக் கொண்டிருக்க வேண்டும்? நாம் வாங்கிய தொகையை விட எவ்வளவு அதிகம் கட்ட வேண்டி வருகிறது? என்று சிந்திப்பதில்லை. சரி, வீடு ஒன்று வாங்க வேண்டும்! அது மட்டுமே சிந்தனை. பிறகு சிறிது சிறிதாக கொடுத்து விடலாம். ஆனால் அவர்கள் அறிவதில்லை. நீண்ட நாளைக்கு அதனை கட்டிக் கொண்டே இருக்க வேண்டும். தமது வருவாய் வாய்ப்புகள் ஓர் எல்லைக்குட்பட்டவை. அதைக் கொண்டு தம்மால் கடனை திருப்பிக் கட்டுவது கஷ்டம். விலைவாசி ஏறிக்கொண்டே செல்கிறது. அவ்வளவும் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் செலவிட்டால்

வீட்டுச் செலவை எப்படி சமாளிப்பது? பிறகு இந்தக் கவலையில் கடன் வாங்கியவர் மீண்டும் மூழ்கி விடுகிறார். கடன் பெருகுகிறது. கடன் சுமை அதிகமாகி விட்டது. பிறகு கூறுகின்றனர். தற்காலிக ஆசை ஒன்று நிறைவேறியது. அதனோடு நிரந்தர கடன் சுமையும் ஏறி விடுகிறது. பிறகு சில வங்கிகள் ஊக்கத்தொகை தருகின்றன. அதுவும் அவர்கள் சொந்தப் பணத்திலிருந்து தருவதில்லை. வங்கியிடம் agreement போட்டு இடம் வாங்கி விட்டனர். வட்டியை தொடர்ந்து கொடுத்து வருகின்றனர். வாழ்நாள் முழுக்க வட்டி கட்டிக் கொண்டே இருக்கின்றனர். பிறகு அவரது மரண வேளையும் நெருங்கி விடுகிறது. பிறகு மிஞ்சியது எதுவும் இல்லை. மீண்டும் இடம் வங்கிக்கே திரும்பப் போய் விடுகிறது. பலர் இதற்கு முன் எனது வட்டி பற்றிய குத்பாவைக் கேட்டு தப்பித்தும் உள்ளனர். சிறிது சிந்தித்துப் பார்த்தால் இந்த வட்டிக்கடன் வளர்ந்து கொண்டே செல்கிறது. பலர் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர். மக்களிடம் வாங்கியே வங்கிகள் கடன் தருகின்றன. அதில் எண்ணெய் வளத்தின் பணமும் அடங்கும். எனவே இவர்கள் தாராள மனத்தைக் காட்டுகின்றனர். இந்த நிலை இங்கு மட்டுமல்ல. அமெரிக்காவிலும் உள்ளது. ஆப்பிரிக்காவிலும் உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று இயற்கைச் சட்டம் தனது வேலையை மட்டும் செய்கிறது. ஓரளவுக்கு மேல் போய் மக்களுக்கு திருப்பிச் செலுத்தும் ஆற்றல் இல்லாமற் போய் விடும் நிலை வந்த போது வங்கிகள் சுதாகரித்துக் கொண்டன. இப்போது மேற்கொண்டு கடன் தருவதை நிறுத்தி விட்டன. இந்த அனாவசியமான செலவுகளுக்காக கடன் தருவதை மட்டும் நிறுத்தவில்லை. மாறாக அவசியமான தேவைகளுக்காக கடன் தருவதையும் நிறுத்தி விட்டன. இதன் தாக்கம் முழு உலகிலும் ஏற்பட்டது. எனவே எங்களிடம் வசதிகள் உள்ளன என்று ஏதாவது நாடு கூறுமாயின் அது தவறாகும். மேற்கத்திய நாடுகளில் போடப்பட்ட பணம் உடனே கிடைக்க சாத்தியமுண்டு. ஆனால் எண்ணெய் வளம் உள்ள நாடுகளின் எண்ணெய்க்கு விலை குறையும். இவ்வார டைம் பத்திரிகை இதுபற்றி எழுதியுள்ளது. அது கூறுகிறது. கடன் என்ற கடலின் தண்ணீரில் தன்னை மிகப்பெரும் வளமுள்ள நாடாக கருதும் அமெரிக்காவின் கப்பலே மூழ்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் பொருளாதாரம் எந்த அளவுக்கு வீழ்ச்சி அடைந்து விட்டது எனில், எவ்வளவு முயன்றாலும் அதை சீர்படுத்த சாத்தியமில்லை. அமெரிக்க பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட எந்த நாடும், குறிப்பாக மேற்கத்திய நாடுகள் பாதுகாப்பாக இல்லை. அமெரிக்காவில் மக்களிடம் Credit card பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. அதற்கும் இப்போது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. யோசிக்காமல் செலவு செய்து கொண்டிருந்தனர். அதற்கு இப்போது சில தடைகள் ஏற்பட்டுள்ளன. கார்களின் விற்பனையில் கடந்த 15 ஆண்டுகளில் மிகவும் சரிவு ஏற்பட்டு விட்டது. விமானப் பயணம் குறைந்துள்ளது. பல கம்பெனிகள் தமது Flight -ஐ நிறுத்தி விட்டன. இவற்றிலெல்லாம் குறிப்பாக அதிகமாக எண்ணெய் பயன்பட்டு வந்தது. பயன்பாடே இல்லையெனில், பிறகு எங்கிருந்து அரபுகளுக்கு பணம் வரும். அதன் தாக்கம் கண்டிப்பாக ஏற்படும். பிறகு உண்ணல், குடித்தல் Restaurant -கள் Entertainment -களில் பணம் செலவழிக்கும் வழக்கம் இவர்களிடம் இருந்தது. அதற்கும் தட்டுப்பாடு வந்து விட்டது. அதுவும் இந்த தட்பவெப்பநிலை சீர்குலைந்த குளிர் நேரத்தில் இந்த தட்டுப்பாடு வந்துள்ளது. பிறகு இந்த பருவகால சீர்கேட்டின் தீய தாக்கமான நோய்களும் பரவியுள்ளன.

அல்லாஹ் கூறுகிறான். வட்டி சார்ந்த தொழில் செய்பவர் ஷைத்தானால் பிடிக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள்.

(தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் அல்பக்கராவின் 276 -வது வசனத்தை ஓதினார்கள்.)

அதன் பொருள் : வட்டியை விழுங்குகின்றவர்கள் ஷைத்தானால் (அதாவது மன நோயால்) கடினமாகத் தாக்கப்பட்டவன் நிற்பது போலன்றி, நிற்கமாட்டார்கள். வணிகமும் முற்றிலும் வட்டியைப் போன்றதே என அவர்கள் கூறுவதே இதற்குக் காரணம். அல்லாஹ் வணிகத்தை ஆகுமானதும், வட்டியை ஆகாததுமாக ஆக்கியிருக்கிறான். தனது இறைவனிடமிருந்து ஏதாவது ஓர் அறிவுரை வந்த பின்னர் அதிலிருந்து தவிர்ந்து கொண்டால், அவர் முன்னர் செய்தது அவருக்கே உரியது. அவருடைய பிரச்சனை அல்லாஹ்விடம்தான். மீண்டும் (அதே காரியத்தை)த் தொடர்ந்து செய்பவர் நிச்சயமாக நெருப்பிற்குரியவர்களாவர். அவர்கள் அதிலேயே (நீண்ட காலம்) இருந்து கொண்டிருப்பர். (2:276)

இப்போது அரசுகள் எந்த ஆபத்தும் இல்லை என்று அறிவித்த போதிலும் தமது பணம் அதிகமாகும் என்பது நிச்சயமில்லை என்ற கவலையுடன் தமது பணம் திரும்பக் கிடைக்குமா என்ற கவலையும் வந்து விட்டது.

இந்த பயமே பெரும் ஆபத்தாகும். ஏனெனில் வங்கியில் கடன் வாங்கி சொத்து வாங்கலாம் என்று நினைப்பவர்களுக்கு கடன் கிடைக்காது. பிறகு இடங்களின் விலை வீழ்ச்சியடையத் தொடங்குகிறது. ஏனெனில் மக்களிடம் பணம் இல்லை. வங்கி கடனும் தருவதில்லை. முதலில் கடன் தருவதாக தைரியம் சொன்ன வங்கிகளிடம் இப்போது பைசா இல்லை. ஆகவே, இப்போது நிலைமைகள் மாறி விட்டன இறைவன் கூறுவது போன்று அவர்கள் ஷய்த்தானால் பிடிக்கப்பட்டவர்கள் போன்று ஆகி விட்டனர். இவ்வாறு depression அதிகமாகி அதன் தீய விளைவுகள் தோன்றி விட்டன. அல்லாஹ் கருணை காட்ட வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு நகைச்சுவை உண்டு. If my neighbour lose his job it is recession. If I lose my job it is depression – எனது பக்கத்து வீட்டுக்காரர் வேலையை விட்டு விட்டால் அது ஓய்வு. எனது வேலை போய் விட்டால் அது சோர்வு.

ஆக, recession என்பது தற்காலிக ஓய்வு விடுமுறை. depression என்பது நிரந்தரமான ஓய்வினால் ஏற்படும் பொருளாதார முடக்கம். ஆனால் இந்த பொருளாதார முடக்கத்தினால் மக்களிடம் இன்னொரு depression ஏற்பட்டு விட்டது. இந்த பொருளாதார முடக்கம் உலகில் இலட்சக்கணக்கானோரின் வேலையைப் பறித்து விட்டது. இப்போதாவது உலகிற்கு அறிவு இருந்தால் இந்த வட்டியில் இருந்து விலக வேண்டும். முஸ்லிம் நாடுகள் எவற்றிடம் இப்போது செல்வம் உள்ளதோ அவை இறைவன் அனுமதித்த வியாபாரங்கள் செய்து முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். முஸ்லிம்கள் வட்டியிலிருந்து மிகவும் கடுமையாக தடுக்கப்பட்டுள்ளனர். பிறகு இந்த உலக தண்டனைகளுக்குப் பிறகு மறுமையின் தண்டனை பற்றிய எச்சரிக்கையும் உள்ளது. எந்த நாடுகள் வசதிவாய்ப்பு இருந்தும் ஈமானுடன் நடந்து கொள்ளவில்லையோ அவை தமது வசதிவாய்ப்பை வீணாக்குகின்றன. அல்லது தமது சுயஇலாபத்தை மட்டும் பார்க்கின்றன. அவை சுதாகரிக்க வேண்டும். உதாரணமாக, பாகிஸ்தான் அல்லது அதுபோன்ற நாடுகள். அதன் தலைவர்களுக்கு ஒருபோதும் தங்கள் நாட்டின் மீது விசுவாசம் இல்லை. கடன் வாங்கிக் கொண்டே இருக்கின்றனர். சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானில் இருந்து மிக மகிழ்ச்சியுடன் ஓர் அறிவிப்பு மீண்டும் செய்யப்பட்டது. சில மில்லியன் டாலர்கள் கடன் பாகிஸ்தானுக்கு கிடைத்துள்ளது.

பிறகு எப்படி திருப்பி கொடுப்பது? அவர்களுக்கே தெரியவில்லை. முதல் payment எப்போது கிடைக்கும் என்றும், நமது Exchange -ம் அதிகமாகி விட்டது என்றும் ஆரவாரத்துடன் பேசுகிறார்கள். உண்மையில் இவர்களிடம் எதுவும் இல்லை. பாகிஸ்தானுக்கு தனது வல்லமையால் சில வசதிவாய்ப்புகளை இறைவன் வழங்கியுள்ளான். நல்ல பருவநிலை மற்றும் சூழ்நிலையை வழங்கியுள்ளான். ஆனால் கேட்டு வாங்குதல், கடன் வாங்குதலின் பழக்கம் இவர்களிடம் ஏற்பட்டு விட்டது. தம்மிடம் உள்ள வளங்களை சரியாக அந்நாடு பயன்படுத்தவில்லை. பிறகு தன்மான உணர்வும் போய் விட்டது. இதே நிலை சில ஆப்பிரிக்க நாடுகளிடமும் உள்ளது. உதாரணமாக, நைஜீரியா. அவர்களிடம் எண்ணெய் வளம் உள்ளது. அவர்களின் தலைவர்களிடம் எந்த சிந்தனையும் இல்லை. காரணம், இறைவனை மறந்துவிட்டு அவனது போதனைகளின்படி அமல் செய்யாமல் வட்டி மற்றும் பேராசையின் பக்கம் சென்று விட்டனர். அல்லாஹ் வட்டிக்கு கொடுப்பவர்களைப் பற்றி கூறுகிறான். உங்கள் கருத்தின்படி வட்டியால் உங்கள் செல்வம் வளர்கிறது. அல்லாஹ்வின் பார்வையில் அதிகரிப்பதில்லை. எது அல்லாஹ்வின் பார்வையில் அதிகரிப்பதில்லையோ அதில் பரக்கத் ஏற்படுவதில்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று முஸ்லிம் நாடுகள் வங்கிகளில் தமது பணத்தை போட்டு வைக்கின்றன. அவற்றிற்கு இறைவனிடமிருந்து பெரும் தண்டனை கிடைக்கும். இறைவனது எச்சரிக்கை உள்ளது. நாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று அவர்கள் கருதுவது மிகவும் தவறு. இப்போதைய நிலைமைகள் இதனை உறுதிப்படுத்தி விட்டன. முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த தண்டனையின் கீழ் வந்து விட்டனர். அவ்வப்போது வந்து கொண்டிருப்பர். அதிகாரம் 30, வசனம் 40 -ல் ஸக்காத்தைப் பற்றி இறைவன் கவனமூட்டுகிறான். ஏழைகளின் உரிமைகளை வழங்குங்கள். முதலில் மூன்று விஷயங்களின் பக்கம் கவனமூட்டப்பட்டது. இதிலும் ஏழைகளின் உரிமையை வழங்குமாறு கூறியுள்ளான். இந்த கடமை அரசுக்கும் உண்டு. இஸ்லாம் செய்யும் தொண்டும் ஆகும். சமுதாயத்தின் ஒவ்வொரு வட்டத்திற்கும் உரிய உரிமையை வழங்குமாறு இறைவன் கூறியுள்ளான். இதுவே உண்மையில் உங்கள் பொருள் அதிகரிப்பதற்கு காரணமாக அமையும். வட்டி ஒருபோதும் காரணமாக அமையாது. முஸ்லிம் நாடுகள் குறிப்பாக நினைவில் கொள்ள வேண்டும். சில மேற்கத்திய நாடுகளும் இப்போது புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளன. ஜெர்மனியில் சிறிது காலத்திற்கு முன்பு வட்டியை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம்

எழுந்தது. துரதிஷ்டவசமாக அதனை அவர்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றுதான் கூற வேண்டும். பிறகு ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி வெளியாகி உள்ளது. தற்போதைய நெருக்கடி நிலைகளுக்குப் பிறகு அது தனது வட்டி வீதத்தை குறைத்த பிறகு பொருளாதார நிலையில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் உண்மையான தீர்வு இதுதான். அவர்கள் எதனை வட்டியாக பெறுகிறார்களோ அதனைப் பெற்றாகி விட்டது. இறைவன் முன்னர் நடந்தவற்றை மன்னித்து விட்டான். எஞ்சிய வட்டியை நீங்கள் மறுத்து மன்னித்து விடுங்கள். வருங்காலத்தில் வட்டி வாங்குவதில் இருந்து திரும்பி விடுங்கள். குறிப்பாக முஸ்லிம்களுக்கு இதிலிருந்து விலக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இது நடந்தால் பிறகு முழு உலகிலும் நாடுகளில் மட்டுமல்ல. தனி நபரிடம் கூட ஏற்பட்டுள்ள இந்த திகில் –பயத்திலிருந்து தப்பிக்க முடியும்.

அல்லாஹ் 30:41 –ல் கூறுகிறான். எல்லா விஷயங்களையும் கூறிவிட்டு அவன் கூறுகிறான். அல்லாஹ்வே உங்களைப் படைத்தான்; உங்களுக்கு உணவளித்தான். அவனே உங்களை மரணிக்கச் செய்வான். அவனே உங்களை உயிர்ப்பிப்பான். உங்களால் இணையாக்கப்பட்டவர்களுள் எவரேனும் இதெல்லாம் செய்கிறார்களா? அவன் தூய்மையானவன். மேலும் அவர்கள் அவனுக்கு ஏற்படுத்தும் இணைகளை விட்டும் அவன் மிக்க மேலானவன்.

இறைவன் இதில் கவனமூட்டியுள்ளான். அல்லாஹ்வே உங்களை படைத்தான். படைத்து விட்டு விடவில்லை. உணவளிக்கின்றான்.

இறைவன் கூறுகின்றான். அவன் தனது எல்லா படைப்பினங்களுக்கும் உணவளிக்கின்றான். மிருகங்களுக்கும் உணவளிக்கின்றான். பறவைகளுக்கும் உணவளிக்கின்றான். அவன் உங்களுக்கும் உணவளிப்பான். நீங்கள் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறை கட்டளையை கவனத்தில் கொள்ளுங்கள். மரணத்தை தருபவனும் அவனே. மரணத்திற்கு பிறகு உயிர் தந்து தன் முன்னால் உங்களை நிறுத்துபவனும் அவனே. அதில் கேள்வி கேட்பான். எனவே வெளிப்படையான ஷிர்க்கும் செய்யாதீர்கள். மறைமுகமான ஷிர்க்கும் செய்யாதீர்கள். அவனது கட்டளைக்கு சிறிதளவு கூட வரம்புமீற முயலாதீர்கள். முஸ்லிம்களுக்கு குறிப்பாக இது எச்சரிக்கையாகும். இந்த வட்டித் தொழில் எவ்வளவு ஆபத்தானது எனில் குறிப்பாக அஹ்மதிகள் அதிலிருந்து தப்பிக்க வேண்டும். இங்கு சூரா பக்கராவின் 279 வது வசனத்தில் இறைவன் கூறுகிறான். (ஹுஸூர் அவர்கள் வசனத்தை அரபியில் ஓதினார்கள்.) அதன் பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் வட்டியி(ன் கணக்கில்) எஞ்சியிருப்பதை விட்டு விடுங்கள்.

அல்லாஹ் வட்டியை தடுத்து ஓரிடத்தில் கூறுகின்றான். (ஹுஸூர் அவர்கள் அல்பக்கராவின் 280 வது வசனத்தை அரபியில் ஓதினார்கள்.)

அதன் பொருள்: நீங்கள் அவ்வாறு செய்யவில்லையாயின், அல்லாஹ்விடம் இருந்தும் அவனுடைய தூதரிடமிருந்தும் போரை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் வட்டியை விட்டும் பாவமன்னிப்புக் கோரினால் (அது அவ்வளவு இழப்புக்குரியதன்று. ஏனெனில்) உங்களுடைய அசல் தொகைகளை நீங்கள் வசூலித்துக் கொள்ளலாம். (இவ்வகையில்) நீங்கள் (எவருக்கும்) அநீதியிழைக்கமாட்டீர்கள். உங்களுக்கும் அநீதி இழைக்கமாட்டீர்கள். (2:280)

இதில் மூஃமின்களுக்கு குறிப்பாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த வட்டி அமைப்பின் கேடு எல்லா மார்க்கத்தவரையும் தாக்குகிறது. அவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் சரி. வட்டி வாங்குபவர் ஷய்த்தானால் பிடிக்கப்பட்டவர் என்று முந்தைய வசனத்தில் பார்த்தோம். அதன் விளைவு தான் வட்டியில் மேன்மேலும் மூழ்கிவிடுகின்றனர். எப்படி செலவு செய்வது என்று அவர்களுக்கு தெரிவதில்லை. நன்மை, தீமையை சிந்திக்கும் உணர்வும் அவர்களிடம் போய் விட்டது. இப்போது கூறுகிறான். இதனால் அல்லாஹ் ரஸூலின் சார்பாக ஒரு போரை உறுதி செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் ரஸூலினால் போர் அறிவிப்பு செய்யும் போது மார்க்கமும் போய்விடும். உலகமும் போய் விடும். முஸ்லிம் நாடுகள் ஆய்வு செய்தால் அவர்களுக்கு தெரியவரும். ஒவ்வொரு நாட்டையும் ஆய்வு செய்ய வேண்டும். நான் குறிப்பாக முஸ்லிம் நாடுகளைக் கூறுகிறேன். ஏழை நாடுகள் மிகவும் சீர்கெட்டுக் கொண்டிருக்கின்றன. பணக்கார நாடுகள் தம்மிடம் எண்ணெய் வளம் இருப்பதால் தமக்கு பிரச்சனையில்லை என்றும் அவர்களின் வறுமையில்

இருந்து தாம் பயனடையலாம் என்றும் நினைக்கின்றன. ஏழ்மையினால் ஏழை நாடுகள் மிகவும் கீழ் நோக்கிப் போகும் போது நாடுகளுக்கிடையில் ஏழ்மை – வளமை வித்தியாசம் அதிகமாகி நான் பெரியவன் என்ற உணர்வு பணக்கார நாடுகளில் ஏற்படுகிறது. நாடுகளுக்கிடையில் பகைமை உருவாகிறது. பணக்காரர் ஏழை என்ற வித்தியாசம் நாட்டின் நிம்மதி குலைவுக்கு மிகப்பெரும் காரணமாகும். பணக்கார நாடுகள் பேராசையின் காரணத்தால் எழை நாட்டுக்கு உதவி செய்வதில்லை. பாகிஸ்தானின் உதாரணத்தைக் கூறினேன். அங்கு பணக்காரர் ஏழை என்ற பாகுபாடு விரிவடைந்து கொண்டே செல்கிறது. அங்குள்ள நிம்மதியின்மைக்கும் அதுவே பெரிய காரணமாக உள்ளது. பிறகு மவ்லவிமார்களுக்கு அதிலிருந்து பலன் பெற்று நிலைமையை மோசமாக்க வாய்ப்பு கிடைத்து விடுகிறது. ஏழைகளையும் குழந்தைகளையும் காரணம் காட்டி மேற்கொண்டு கடன் பெறுகின்றனர். பணக்காரர்கள் தமது கடமையை சரிவர நிறைவேற்றினால் இந்த அளவு சிக்கல் வராது. இன்று இந்த சிக்கலுக்கு இன்னும் பல காரணங்கள் இருந்தாலும் இது பெரிய காரணமாகும். எனவே ஏழை நாடுகளில் மோசமான இந்நிலை மேலும் மேலும் பீறிட்டுக் கொண்டே இருக்கிறது. அல்லாஹ்வின் இந்த போர் பிரகடனத்தின் விளைவு இப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்ற காலத்திலும் நாம் பார்த்தோம். இப்போதும் பார்த்து வருகிறோம். இந்த வட்டிக்கு கொடுக்கப்பட்ட பணமே போருக்கு காரணமாக அமைகிறது. இந்த பணம் மற்றவர்களை கையகப்படுத்த அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி கையகப்படுத்த தூண்டுகிறது. எனவே வட்டியும் அவர்களால் தர முடியப்போவதில்லை. கடனையும் திருப்பிச் செலுத்தப்போவதில்லை. இன்று அமைதியை காப்பாற்றுகிறோம் என்ற சாக்கில் சண்டை நடக்கிறது. இது பிரச்சனையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கல்ல. அவர்களின் வளங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இவை நடக்கின்றன. எளிய நிபந்தனைகள் என்று கூறி இதனை ஏற்றுக் கொள்ள வலியுறுத்துகின்றனர். அதனால் அங்கு அமைதி அல்லது அவர்கள் விரும்புகிற நபரின் ஆட்சி நிலைநாட்டப்படுகிறது. இதற்கு இணங்காவிட்டால் மீண்டும் போர்தான் என்று நிர்ப்பந்தப்படுத்துகின்றனர். இது அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராகும். நேரம் வரும் போது அல்லாஹ் இந்த சக்திபடைத்தவர்கள் மீது தனது ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். இழிவுபடுத்தி விடுகிறான். இப்போது நாம் நமது கண்களால் இவற்றை கண்டு விட்டோம். இந்த எல்லா முயற்சிகளும் அவர்களின் நல்ல வளமான பொருளாதார நிலையில் இருந்தும் இறைவன் அவர்களின் வேரை அறுத்து விட்ட போது தலைகீழாகக் கவிழ்ந்து விட்டன. பணம் தருபவர்களாலும் இவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. அரசும் மக்களின் பணத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டி வந்தது. யாரிடமிருந்து இவர்கள் கடன் பெற்றார்களோ அவர்களுக்கே உதவி செய்ய வேண்டி வந்தது. அங்கு பொதுமக்களின் பைசா செலவாகிறது. எவ்வளவு விரைவில் இந்நிலை சீர்படும் என்று யாரும் சொல்ல முடியாது. உலகம் பேச ஆரம்பித்து விட்டது. அமெரிக்கா போன்ற ஆற்றல் வாய்ந்த பொருளாதாரம் சரியும் போது அது விரைவில் சீர்பட சாத்தியமில்லை. மற்றவர்களின் வசதிவாய்ப்புகளை இவர்கள் எப்போதும் கண்வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். இதுவும் இந்த சீர்கேட்டிற்கு பெரும் காரணமாகும்.

இறைவன் கூறுகின்றான்: எவர்களுக்கு தற்காலிக உலகப் பொருள்களை கொடுத்துள்ளோமோ அதன் பக்கம் அதிகம் பார்வையை செலுத்தாதீர்கள். ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். உமது பொருள் அல்லாதவற்றில் – அல்லது உமக்கு கிடைக்காத பொருளைப் பின்பற்றாதீர்.

இது அடிப்படை விதியாகும். ஒருவர் தனது பொருளாதாரத்தையே சார்ந்து நிற்க வேண்டும். மூஃமின்களுக்கு குறிப்பாக கட்டளையிடப்பட்டுள்ளது. நீங்கள் அடுத்தவரின் பணத்தை நோட்டம் விடாதீர்கள். அவை தற்காலிக பொருள்கள்; நிரந்தரமாக இருப்பவையல்ல. ஒரு மூஃமின் தனது முடிவையும் இறைவனது தக்தீரையும் கொண்டிருக்க வேண்டும். இந்த தற்காலிக பொருளின் மீது பார்வை செலுத்துபவர்கள் அதனை விரும்புபவர்கள் அழிந்து கொண்டிருக்கின்றனர். எனவே உலகம் இதனை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தமது வசதிவாய்ப்புக்குள் வாழ்க்கை நடத்த வேண்டும். இது நாடுகளுக்கும் பொருந்தும். தனி நபருக்கும் பொருந்தும்.

அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப வட்டியிலிருந்து விலகுங்கள். வீழ்ச்சியைப் பற்றி அறிவு இருந்தால் தேவையில்லாத செலவுகளின் மீது பார்வை போகாது. அண்டை வீட்டாரின் நல்ல பொருளைப் பார்த்து இதுபோன்று தானும் வாங்க வேண்டும் என்ற எண்ணம் வராது. அல்லது தனது நண்பரின் நல்ல காரைப் பார்த்து விட்டு தானும் அதுபோன்று வாங்க வேண்டும் என்ற எண்ணம் வராது. அல்லது தனது உறவினரின்

அழகிய வீட்டைப் பார்த்து இதுபோன்று தானும் வாங்க வேண்டும் என்ற எண்ணம் வராது. நிச்சயமாக வீடு வேண்டும்தான். எல்லாருக்கும் அதற்கு ஆசை உண்டு. ஆனால் வட்டி வாங்கியல்ல. இதேபோன்று நாடுகள் மற்ற நாட்டின் பொருளை கையகப்படுத்த விரும்பாமல் வியாபாரத்தின் மூலம் ஒருவர் மற்றவருக்கு பயன்தர முயல வேண்டும். இறைவன் கூறியது போன்று சின்னஞ்சிறு ஏழைகளுக்குக் கூட தமது நாட்டின் வாய்ப்புகள் மூலம் தான் தமது முன்னேற்றத்திற்காக செலவு செய்யப்பட வேண்டும். அன்னிய நாட்டின் உதவிகள் நமது நன்மைக்காக செய்யப்பட்டால் பரவாயில்லை. அவை நமது வசதிகளை சுரண்டுவதற்காக செய்யப்பட்டால் அவை தேவையில்லை. தலைவர்கள் தமது நாட்டின் செல்வத்தை ஈமானுடன் நாட்டுப்பற்றுடன் தனது நாட்டின் நன்மைக்காக செலவிட வேண்டும். அதனால் குழப்பம் நீங்கும். அல்லாஹ்வுடைய வரம்புகளை கவனத்தில் கொள்ள வேண்டும். உரிமை உடையவருக்கு அவரது உரிமைகளை தந்து விட்டால் ஷய்த்தானின் பிடியில் இருந்து தப்பித்து விடலாம். வட்டியின் அமைப்பிலிருந்தும் தப்பித்து விடுங்கள். அதனால் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக முடியும். ஒவ்வொரு வட்டத்திலும் உலகம் இதனை புரியாத வரை யுத்தத்தின் காட்சியை காணவே வேண்டி வரும். அல்லாஹ்வின் புறமிருந்து அவ்வப்போது இந்த தண்டனைகள் இறங்கிக் கொண்டிருக்கும். இன்று பிரச்சனைகளின் தீர்வு மூஃமின்களிடம் தான் உள்ளது. எல்லா முஸ்லிம்களும் முஸ்லிம் நாடுகளும் இதிலிருந்து வெளியேறுவதற்கு வெளியேற்றுவதற்கு முயல வேண்டும். ஆகவே இறைவன் கூறுகின்றான் :

**யா அய்யுஹல்லதீன ஆமனூ லாதஃகுலுர்ரிபா அழ்ஆஃபம் முழஅஃபதன் வத்தகுல்லாஹ லஅல்லகும் துஃப்லிஹூன்** – நம்பிக்கை கொண்டவர்களே! (பொருளை) அளவின்றிப் பெருகச் செய்யும் (உங்கள் பொருளுக்கு உரிய) வட்டியை நீங்கள் விழுங்காதீர்கள். நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

எனவே வெற்றி பெறுவதற்கு தக்வா அவசியமாகும். குறைந்தபட்சம் முஸ்லிம்களிடமாவது தக்வா இருக்கச் செய்வானாக. குறிப்பாக பணக்கார முஸ்லிம் நாடுகள் அவை வட்டி சம்பாதிப்பதற்காக மேற்கத்திய வங்கிகளில் தமது பணத்தைப் போட்டு வைக்கின்றனர். ஆனால், அவை ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் மூலம் வெளியாகி உள்ள அல்லாஹ்வின் குரலை கேட்கட்டும். இதுவன்றி இக்காலத்தில் எந்த ஈடேற்றமும் இல்லை. எந்த உத்திரவாதமும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இக்காலத்தில் மக்களுக்கு ஆன்மீக நீர் தேவை. பூமி முற்றாக மரித்து விட்டது. கரையும் கடலும் குழப்பமாகி விட்டது. காடும் நாடும் குழப்பத்தில் உள்ளது. காடு என்பது கீழ் நாடு. நாடு என்பது வேதத்தை உடையவர்கள், அறிவீனர்கள், அறிவுள்ளவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். குறிப்பாக எல்லா பகுதியிலும் குழப்பம் ஏற்பட்டு விட்டது. எக்கோணத்தில் பார்த்தாலும் உலகின் நிலை தடம் புரண்டுள்ளது. ஆன்மீகம் சிறிதும் இல்லை. அதன் சுவடு கூட இல்லை. நல்லொழுக்க செயல் இல்லை. இறைவணக்கம் இறையுணர்வு அழிந்து போய் காணப்படுகிறது. எனவே இக்காலத்தில் வானத்தின் நீர் நுபுவ்வத்தின் ஒளி தேவை. அவை தோன்றி தகுதி வாய்ந்த உள்ளத்தை ஒளியூட்ட வேண்டும். இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவன் தனது ஒளியை இறக்கியுள்ளான். ஆனால் மிகக் குறைந்தவர்களே அதிலிருந்து பலன் பெறுகின்றனர். இறைவன் உலகிற்கு தவ்ஃபீக் தருவானாக. அவர்கள் இந்த ஒளியினுள் வர வேண்டும். இறைவனின் கட்டளையை ஏற்காததால் இப்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து அப்போதுதான் தப்பிக்க முடியும். இப்போது இறைவனை அறிமுகப்படுத்தவும், அவனை சென்றடைய வைக்கவும் ஒரே வழி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான பின்பற்றுதல். அல்லாஹ் இந்த அடிப்படை விதியை உலகிற்கு புரிய வைப்பானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 31.10.2008**

Translated by : **Maullim M. Nizamudeen Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**